வணக்கம்
ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர்: மலர்விழி

நாள்: 07.08.2026 நேரம்: 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

கைத்தறித் துறை, மக்களின் வாழ்வாதாரமாக மட்டுமின்றி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான முக்கிய கருவியாகவும் திகழ்வதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, டெல்லி ஐஐடி உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்ற இருக்கிறார்.

புதுச்சேரியில், மத்திய உள்துறை அமைச்சரின் வருகையை ஒட்டி மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடுகளை, இன்று துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுச்சேரியில், சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின் முதல் நாளான வரும் 24ஆம் தேதி, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பட்ஜெட் தாக்கல் செய்கிறார்.

----------------------------

கைத்தறி-முர்மு 1 (7)

கைத்தறித் துறை, நெசவாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் வாழ்வாதாரமாக மட்டுமின்றி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான முக்கிய கருவியாகவும் திகழ்வதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையின் கலாச்சார மையத்தில் இன்று நடைபெற்ற தேசிய கைத்தறி தினவிழாவில் அவர் பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார். இது குறித்து கூடுதல் விவரங்கள்.....

கைத்தறி-முர்மு 2 (14)

<u>தேசிய கைத்தறி தின விழாவின்போது, 2025ஆம் ஆண்டிற்கான சந்த் கபீர் கைத்தறி விருதுகள், மற்றும், தேசிய கைத்தறி விருதுகளை, குடியரசுத் தலைவர் வழங்கி சிறப்பித்தார். நாட்டின் பல்வகை கைத்தறி நெசவு மரபுகள் குறித்த, 4 நினைவு தபால் தலைகளையும் அவர் வெளியிட்டார். நாகரீகம், மற்றும், கலாச்சார ரீதியிலான இந்தியாவின் பயணத்தில், கைத்தறித் துறைக்கு முக்கிய இடம் இருப்பதாக குடியரசுத் தலைவர் தமது உரையில் கூறினார். நாட்டில், 35 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள், கைத்தறித் துறையில் ஈடுபட்டு உள்ளதாகவும், இதில் சுமார் 25 லட்சம் பேர் பெண்கள் என்றும், அவர் தெரிவித்தார். இத்துறையினால், வேலை வாய்ப்பு, மற்றும், மகளிர் அதிகாரப்</u>

பங்கேற்பு மட்டுமின்றி, கலை-கலாச்சாரம், மற்றும், இயற்கை மீதான அன்பும் மேம்படுவதாக அவர் குறிப்பிட்டார். நாட்டின் விடுதலை போராட்டத்தில், கைத்தறிக்கு முக்கிய பங்கு இருப்பதையும், சுயசார்பின் சின்னமாகவே இத்துறை திகழ்ந்து வருவதையும், குடியரசுத் தலைவர் சுட்டிக் காட்டினார்.

-----------------------------

மோடி கைத்தறி (11)

தேசிய கைத்தறி தினத்தை ஒட்டி, மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் இன்று, ஆங்கில நாளேடு ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். பிராந்திய வாரியாக இந்தியாவில் காணப்படும் வளமான ஜவுளி பாரம்பரியத்தை பிரதிபலிப்பதே, தேசிய கைத்தறி தினம் என்றும், தொண்மை நாகரீக ரீதியில், இந்தியாவின் மிகப் பெரிய வலுவே கைத்தறி துறைதான் என்றும் அவர்கூறியுள்ளார். கைத்தறி துறையின் அடுத்தகட்ட வளர்ச்சியில், பாரம்பரியத்தை, தொழில்நுட்பம், படைப்புத் திறன், மற்றும், தொழில் முனைப்புடன் ஒருங்கிணைத்து, நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, இந்திய இளைஞர்கள் ஒன்றாக முன்வர வேண்டும் என, ஜவுளித் துறை அமைச்சர் கட்டுரையில் கூறியுள்ளார்.

-----------------------------

நாடாளுமன்றம் (12)

டெல்லி மாணவர் போராட்டத்தின் போது, போலீசார் மேற்கொண்டதாகக் கூறப்படும் நடவடிக்கைகள் குறித்து, மத்திய உள்துறை அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும் எனக் கோரி, இன்றும், நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், இரு அவைகளிலும் அலுவல்கள் முதலில் ஒருமுறையும், பின்னர், வரும் திங்கட் கிழமை வரையிலும் ஒத்தி வைக்கப்பட்டன. சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்கான திருத்த மசோதா, அண்மையில் மாநிலங்களவையில் நிறைவேற்றப் பட்டதை தொடர்ந்து, இன்று மக்களவையிலும், அமளிக்கு இடையிலேயே நிறைவேற்றப்பட்டது. முன்னதாக இன்று காலை இரு அவைகளிலும் அலுவல்கள் தொடங்கியவுடன், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 84ஆம் ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி, விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

-----------------------------

மோடி-ஐஐடி (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, டெல்லி ஐஐடி உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்ற இருக்கிறார். விழாவின் போது, 587 முனைவர் பட்ட ஆய்வாளர்கள் உட்பட, படிப்பு முடித்த 3 ஆயிரம் பேருக்கு, பட்டங்கள் வழங்கப்பட உள்ளன. சிறப்பான முறையில் தேர்ச்சி

பெற்ற மாணவர்களுக்கான, குடியரசுத் தலைவரின் தங்கப் பதக்கம், சங்கரதயாள் சர்மா தங்கப் பதக்கம் உள்ளிட்ட பதக்கங்களையும், பிரதமர் திரு. நரேந்திர மோடி வழங்க இருக்கிறார். டெல்லி ஐஐடி உயர்கல்வி நிறுவனத்தின் சோனிப்பட் வளாகத்தில், பரம் பிராக்யா என்ற பெயரில் புதிதாக நிறுவப்பட்டுள்ள, செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான சூப்பர் கம்ப்யூட்டிங் வசதிகளையும், விழாவின் போது பிரதமர் தொடக்கி வைப்பார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

----------------------------

தமிழ்நாடு கவன ஈர்ப்பு 1 (17)

காவிரி நீரில் தமிழகத்திற்கு உரிய பங்கை கோரிப் பெறும் முயற்சிகளை, அரசு கைவிடாது என்று, முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார். காவிரிப் பிரச்சனை குறித்து இன்று தமிழக சட்டமன்றத்தில், திமுகவினர் கொண்டு வந்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு அவர் பதில் அளிக்கையில், பிரச்சனையை அரசியலாக்க அரசு விரும்பவில்லை என்றும், இதில் பேச்சை விட நடவடிக்கைதான் முக்கியம் என்றும் கூறினார். மேகதாதுவில் அணைக்கட்ட, கர்நாடக அரசுக்கு அனுமதி அளிக்க வேண்டாம் என்றும், தமிழக அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி வருவதாக அவர் கூறினார்.

முன்னதாக, சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின், கவன ஈர்ப்பு தீர்மானத்தை அவையில் கொண்டு வந்து பேசுகையில், பிரச்சனை குறித்து அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றை அரசு கூட்ட வேண்டும் என்று கோரினார்.

விவசாயிகளின் வேளாண் கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். தமிழக வேளாண் அமைச்சர் திரு. ஆர். வினோத், விவாதங்களில் பங்கேற்று பேசுகையில், பயிர்க் காப்பீட்டுத் திட்டம், மற்றும், பிரதமரின் ஃபசல் பீமா திட்டத்தின் கீழ், டெல்டா பகுதி விவசாயிகளும் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தமிழ்நாடு கவன ஈர்ப்பு 2 (7)

டெல்டா மாவட்டங்களை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என, முன்னாள் முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமி கோரினார். பாமக, சிபிஐ, மற்றும், சிபிஎம் உறுப்பினர்களும், விவாதங்களில் பங்கேற்று பேசினர்.

மாநிலங்களில் இருந்து மத்திய அரசால் வசூலிக்கப்படும் நிதியில், மாநிலங்களுக்கு உரிய பங்கு வழங்கப்படுவதை, மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி, அரசுத் தீர்மானம் ஒன்றும், தமிழக சட்டமன்றத்தில் இன்று நிறைவேற்றப்பட்டது.

----------------------------

புதுச்சேரி ஆய்வு (13)

புதுச்சேரி காவல் துறைக்கு, குடியரசுத் தலைவரின் வண்ணக் கொடி வழங்கும் விழாவிற்காக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, புதுச்சேரி வரவிருப்பதை ஒட்டி, கோரிமேடு ஆயுதப் படை மைதானத்தில் நடைபெற்று வரும் முன்னேற்பாடுகள், மற்றும், ஒத்திகை நிகழ்ச்சியை, இன்று துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், தலைமைச் செயலர் திரு. சரத் சௌகான், காவல் துறை தலைமை இயக்குநர் திருமதி ஷாலினி சிங், மற்றும், உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர். இதற்கிடையே, மத்திய உள்துறை அமைச்சரின் வருகையை ஒட்டி, புதுச்சேரியில், நாளையும், நாளை மறுநாளும், ஆளில்லா விமானங்கள், மற்றும், ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப் பட்டுள்ளது. இதை மீறுவோர் மீது, பாரதீய நியாய சம்ஹீதா சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என, மாவட்ட குற்றவியல் நீதிபதி திரு. குலோத்துங்கன் அறிவித்துள்ளார்.

-----------------------------

## புதுச்சேரி சட்டமன்றம் 1 (16)

புதுச்சேரியில், 16ஆவது சட்டப் பேரவையின் முதல் கூட்டம், வரும் 24ஆம் தேதி ஆளுநர் உரையுடன் தொடங்க உள்ளது. சபாநாயகர் திரு. அன்பழகன் இன்று, சட்டப் பேரவை வளாகத்தில், செய்தியாளர்களிடம் பேசுகையில் இதை தெரிவித்தார். சட்டப் பேரவைச் செயலர் திரு. தயாளன், இந்த செய்தியாளர் கூட்டத்தின் போது உடன் இருந்தார். சபாநாயகர் திரு. அன்பழகன் பேட்டி குறித்து கூடுதல் தகவல்கள்.....

புதுச்சேரி சட்டமன்றம் 2 (12)

புதுச்சேரியில், சட்டமன்ற கூட்டத் தொடரின் முதல் நாளான, வரும் 24ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்கு, நிதித் துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நடப்பு நிதியாண்டிற்கான மாநில அரசின் நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்கிறார். சட்டப் பேரவை நிகழ்வுகளை, பேரவையின் அதிகாரப்பூர்வ இணைய தளத்திலும், you-tube, Face Book, எக்ஸ் உள்ளிட்ட சமூக வலைதளங்கள், மற்றும், உள்ளூர் தொலைகாட்சிகளில் பொது மக்கள் காணலாம் என்றும், சபாநாயகர் திரு. அன்பழகன் தெரிவித்துள்ளார். பேரவைக் கூட்டம் எத்தனை நாட்களுக்கு நடைபெறும் என்பதை, அவையின் அலுவல் ஆய்வுக் குழு கூடி முடிவு செய்யும் என்றும், சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்படும் சட்ட முன்வரைவுகள், மற்றும், இதர ஆவணங்களை, இணைய தளத்தில் வெளியிட ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

-----------------------------

புதுச்சேரி கலைஞர் (6)

தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி நினைவு நாள் இன்று புதுச்சேரியில், அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. கடற்கரை சாலை மேரி கட்டிட அரங்கில், அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த அன்னாரின் திருவுருவப் படத்திற்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. அன்பழகன், அமைச்சர்கள் திரு. ராஜவேலு, திரு சிவக்கொழுந்து, மற்றும், சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும், மலரஞ்சலி செலுத்தினர்.

-----------------------------

வாணிதாசன்(3)

புதுச்சேரியில் கவிஞரேறு வாணிதாசனார் நினைவு நாளை ஒட்டி, அமைச்சர்கள் திரு. ராஜவேலு, திரு. சிவக்கொழுந்து, மற்றும், சட்டமன்ற உறுப்பினர்கள், வாணிதாசனார் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தனர்.

-----------------------------

## காரைக்கால் தாய்ப்பால் (6)

காரைக்கால் மாவட்ட துணை ஆட்சியர் அலுவலக வளாகத்தில், பாலூட்டும் தாய்மார்களின் வசதிக்காக பிங்க் ரூம் திறக்கப் பட்டுள்ளது. உலகத் தாய்ப்பால் வாரத்தை ஒட்டி வருவாய் துறை துணை ஆட்சியர் செல்வி. பூஜா தலைமையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், 2 மாத குழந்தைக்கு தாயான திருமதி செம்மலர், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, புதிய வசதியை திறந்து வைத்தார்.

-----------------------------

வானிலை (13)

இன்று, கோவை-தேனி மாவட்ட மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், வடதமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 13ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கோவை மாவட்டம் உபாசியில் 6 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில், 3 செ.மீ மழை பெய்துள்ளது.

-----------------------------

கேரளம் மழை (7)

கேரளத்தில், கோழிக்கோடு, கண்ணூர், வயநாடு, காசர்கேட் ஆகிய 4 வட மாவட்டங்களுக்கு, இன்று, அதிகனமழை குறித்த, ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. வேறு 4 மாவட்டங்கள், மிக கனமழை குறித்த ஆரஞ்சு அலர்ட் எச்சரிக்கையின் கீழ் வைக்கப் பட்டுள்ளன. எஞ்சியுள்ள 6 மாவட்டங்களுக்கு, கனமழை குறித்த மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. கேரளத்தின் கடலோரப் பகுதிகளில், மீன்பிடி செயல்பாடுகளுக்கு தடை நீடிப்பதாகவும், தகவல் வெளியாகி உள்ளது.

-----------------------------

## கொரியா மாஸ்டர்ஸ் (6)

தென்கொரியாவில் நடைபெறும் கொரியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் சேம்பியன் பட்டப் போட்டிகளின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் ரட்சிதா ராம்ராஜ், அஷ்மிதா சாலிஹா ஆகியோர், அரையிறுதி நிலைக்கு முன்னேறி உள்ளனர். காலிறுதிப் போட்டிகளில் முறையே, சக வீராங்கனை தான்வி ஷர்மா, மற்றும், ஜப்பானிய வீராங்கனை ஹீனா அக்கேச்சியை இவர்கள் தோற்கடித்தனர்.

-----------------------------

மீண்டும் தலைப்புச் செய்திகள்

கைத்தறித் துறை, மக்களின் வாழ்வாதாரமாக மட்டுமின்றி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான முக்கிய கருவியாகவும் திகழ்வதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, டெல்லி ஐஐடி உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்ற இருக்கிறார்.

புதுச்சேரியில், மத்திய உள்துறை அமைச்சரின் வருகையை ஒட்டி மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடுகளை, இன்று துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுச்சேரியில், சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின் முதல் நாளான வரும் 24ஆம் தேதி, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பட்ஜெட் தாக்கல் செய்கிறார்.